
Price 50 Ps. only

# நற்கருணை வீரன்

இதழ் 54 ஏப்ரல் 2007 எண் 4



ஊசியை எடுத்துச் செல்லும் கலை(து)

பரமார்த்த குருவும் சீடர்களும் ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊ ;க்குச் செல்லும்போது காட்டுப் பாதைகளிலும் கரடு முரடான பகுதிகளிலும் நடந்து செல்ல வேண்டியிருந்தது. சீடர்கள் சிலமுறை பள்ளத்தில் தடுமாறி விழுந்தனர்; சிலமுறை மழை பெய்திருந்ததால் நடக்கும்போது வழுக்கி சேற்றில் அமிழ்ந்தனர். இருந்தாலும் அவர்களின் வாழ்க்கைப் பயணம் எந்தக் கவலையுமின்றி நிம்மதியாகப் போய்க் கொண்டிருந்தது.

ஒருநாள் பரமார்த்த குருவே தள்ளாடி கீழே விழுந்துவிட்டார். அதுமட்டுமல்ல அவருடைய வலதுகாலில் ஒரு பெரிய முள் குத்தி உள்ளேயே முறிந்துவிட்டது. வேதனை தாங்கமுடியாமல் துடித்த குருவை உடனே எல்லாரும் சேர்ந்து தூக்கிச் சென்று ஒரு மரத்தின் நிழலில் அமரச் செய்தார்கள். "குருவே, நீங்கள் வேதனைப்படுவதை எங்களால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. இப்போது என்ன செய்ய வேண்டும்?" என்று பணிவோடு கேட்டனர். குரு அவர்களைப் பார்த்து "கவலைப்படாதீர்கள். இந்த முள்ளைக் காலிலிருந்து எடுத்து விடலாம்" என்று சொல்லி, "அதோ, தெரிகிறதே, அந்த ஊருக்குப் போய் யார் வீட்டில் இருந்தாவது ஒரு ஊசி வாங்கி வாருங்கள். முள்ளை எடுத்துவிடலாம்" என்றார்.

குரு சொன்னதுதான் தாமதம். உடனே எல்லாரும் அந்த கிராமத்தை நோக்கி ஓடினார்கள். ஒவ்வொருவரும் தான்தான் ஊசி வாங்கிக் கொண்டு, குருவிடம் முதலில் செல்ல வேண்டும் என்று போட்டியிட்டுக் கொண்டு ஆளுக்கொரு வீட்டிற்குச் சென்றார்கள். தங்கள் குருவின் வேதனையை எடுத்துரைத்து "ஒரு ஊசி கொடுங்கள்' என்று கேட்டார்கள். இவர்களைப் பார்த்த சிலர் பைத்தியம் பிடித்தவர்கள் என்று துரத்திவிட்டனர். சில வீடுகளில் ஊசிக்குப் பதில் உதைதான் கிடைத்தது. இருந்தாலும் இதையெல்லாம் அவர்கள் பொருட் படுத்தவில்லை. தங்கள் குருவுக்காக எதையும் தாங்கிக்கொள்ளத் தயாராக இருந்தனர்.

அப்போது அந்த வழியில் வந்த ஒரு விவசாயிடம் தங்கள் தேவையைத் தெரிவித்தார்கள். அவர் இவர்கள் மேல் இரக்கப்பட்டு ஓர் ஊசியை வீட்டிலிருந்து எடுத்து வந்தார். அதைப் பார்த்ததும் " அதை என்னிடம் தாருங்கள், என்னிடம் தாருங்கள்" என்று சீடர்கள் போட்டி போட்டுக்கொண்டு அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். அவர்களின் சூதுவாதற்ற வெகுளித் தனத்தைக் கண்ட அந்த விவசாயி, " நீங்கள் எல்லாரும் இந்த ஊசியை உங்கள் குருவுக்கு எடுத்துச் செல்ல விரும்புகிறீர்களா?" என்று கேட்டார். "ஆம், ஆம்" என்று சீடர்கள் உற்சாகமாகப் பதிலளித்தார்கள்.

"அப்படியென்றால் அதோ அங்கு என் வீட்டின் முன் கிடக்கும் அந்த பெரிய மரக் கட்டையில் இந்த ஊசியைக் குத்தி நீங்கள் எல்லாரும் அதைச் சுமந்து செல்லுங்கள். அந்தக் கட்டையை அங்கேயே விட்டுவிடுங்கள். அது என் தோட்டம்தான்" என்று அந்த விவசாயி கூறினார். உடனே சீடர்கள், "ஆகா! இது எவ்வளவு அற்புதமான யோசனை!" என்று கூறி அந்தக் கட்டையில் அந்த ஊசியைக் குத்தி, அனைவரும் அதை சுமந்து சென்றனர். ஏதோ ஓர் அரும்பெரும் சாதனை செய்வதுபோல் அவர்கள் பெருமிதத்தோடு நடந்து சென்றதைப் பார்த்த கிராமமக்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள். கூலியில்லாமல் தன் நிலத்திற்கு அந்தப் பெரிய மரக்கட்டையைத் தூக்கிச் செல்வதைக் கண்ட விவசாயி உள்ளூர மகிழ்ந்தார்.

மாணவச் செல்வங்களே! இந்தக் கதையில் நீங்கள் தெரிந்துகொள்வதென்ன? உங்கள் வீட்டில் இதை எல்லாருக்கும் சொல்லுங்கள். சேர்ந்து அலசிப்பாருங்கள்!

## மதிப்பு



ஒரு பள்ளியில் நல்லொழுக்க வகுப்பு நடந்துகொண்டிருந்தது. அப்போது ஆசிரியர் மாணவர்களைக் கேட்டார்:

'உங்கள் ஒவ்வொருவருக்கும் வாய்ப்புக் கொடுத்தால், நீங்கள் என்ன பொருளாக மாற விரும்புகிறீர்கள்?' ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக் கூறினர்.

'நான் ஏவுகணை ஆகி விண்ணைத் தொடுவேன்.' 'நான் அணுசக்தியாவேன். அகிலத்தையே மிரட்டுவேன்.' 'நான் சூரியனாகி அண்டத்திற்கே ஒளி தருவேன்.'


ஒருவன் மட்டும் வித்தியாசமாய் பதில் சொன்னான்:. 'நான் தொலைக்காட்சிப் பெட்டியாவேன்...' அனைவரும் அவனை வியப்புடன் பார்த்தார்கள். ஆசிரியர் அந்த மாணவனிடம் காரணத்தைக் கேட்டார். அதற்கு அவன் சொன்ன பதில்:

'நான் தொலைக்காட்சி பெட்டியானால்... மக்கள் பூஜை அறையை விட என் இடத்தைத் தான் சுத்தமாக வைத்திருப்பார்கள். நல்ல துணியுடுத்தி மதிப்பார்கள். சுகமில்லை என்றால், உடனே வைத்தியரிடம் காட்டி குணப்படுத்துவார்கள். என்னைப் பார்த்து அழுவார்கள். சிரிப்பார்கள். அறிவோடு வளர்வதாக நினைத்துக்கொள்வார்கள். என்னைப் பார்த்து விட்டுத்தான் தினமும் தூங்கப் போவார்கள்...' இறுதியாகச் சொன்னான்: 'நான் செய்தி என்று எதைச் சொன்னாலும்... அதை அப்படியே நம்புவார்கள்..!'

நீங்கள் டிவி முன் எவ்வளவு மணி நேரம் செலவழிக்கின்றீர்கள்? அதிலிருந்து நீங்கள் உங்கள் வாழ்க்கைக்கு கற்றுக்கொள்வது என்ன?

## இயேசுவின் ஆடைகளைக் களைதல்

சிலுவை சுமந்து சென்ற இயேசுவைப் படை வீரர்கள் சாட்டையால் அடித்துக் கொண்டு முரட்டுத் தனமாக நடத்திச் சென்றார்கள். இயேசுவின் உடல் வேதனையைத் தாங்க முடியாமல் துடித்தது. அவர் பலமுறை கீழே விழுந்தார். அதைப் பார்த்த படை வீரர் களுக்கு, இயேசு கல்வாரி உச்சியை அடைவாரா என்ற சந்தேகம் எழுந்தது. எனவே அவருக்குப் பதிலாக சிலுவையைச் சுமப்பதற்கு யாராவது கிடைப்பார்களா என்று தேடினர். அப்போது அந்தக் கூட்டத்தில் சீரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் என்பவர் அவர்களுக்குத் தென்பட்டார். அவர் ஒரு கிராமத்திலிருந்து வந்தவர் என்பதால் அவரைக் கட்டாயப்படுத்தி அழைத்து வந்தார்கள். இயேசுவின் சிலுவையை அவர்மேல் வைத்து, இயேசுவுக்குப் பின் அதைச் சுமந்துகொண்டு போகச் செய்தார்கள். 'ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்' –



இல்லையா? நாட்டுப் புறத்திலிருந்து வந்த அந்த நல்ல மனிதரும் படைவீரர்கள் கேட்டுக் கொண்டபடியே சிலுவையைச் சுமந்தார்.

நண் பகல் நேரம். வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. இயேசு 'மண்டை ஓடு' என அழைக்கப்படும் கல்வாரி மலை உச்சியை அடைந்தார். (இதை எபிரேய மொழியில் 'கொல் கொத்தா' என்று அழைத்தனர்.) உடனே படைவீரர்கள் அவரைச் சிலுவையில் அறைவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். முதலில் இயேசு அணிந்திருந்த ஆடையைக் களைந்தார்கள். களைந்தார்களா உரித்தார்களா? ஏனெனில் அவருடைய ஆடை ஆழமான புண்களின் இரத்தத்தில் தோய்ந்து, பின்னர் காய்ந்து போய் ஒட்டிக் கொண்டிருந்தது. படைவீரர்கள் ஆடையைப் பலவந்தமாகப் பிடித்து இழுத்தபோது மறுபடியும் புண்கள் இரத்தக் குளமாயின. தாங்க முடியாத வேதனையால் இயேசுவின் உடல் வெந்தது. "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?" இயேசு சிந்திய இரத்தத் துளி ஒவ்வொன்றும் அவரின் இதயத்திலிருந்து பொங்கி வரும் எல்லையற்ற அன்பை இந்த உலகிற்குப் பறை சாற்றிக் கொண்டிருந்தது.

(தொடரும்)

# தங்கத் திறவுகோல் (3)

## மீண்டும் ஒரு வாய்ப்பு



பொம்மை மாளிகைக்குள் நுழைகின்ற இரகசியம் என்னவாக இருக்கும் என்று சிந்தித்துக் கொண்டே விமலா நடந்து வந்து கொண்டிருந்தாள். அப்போது, சிறிது தொலைவில் ஒரு வயதான பாட்டி தலையிலும் இடுப்பிலும் இரண்டு கூடை களைச் சுமந்து கொண்டு செல்வதைப் பார்த்தாள். பாவம் அந்த பாட்டி! தள்ளாடி நடந்த போது கூடையில் இருந்து சில பொட்டலங்கள் கீழே விழுந்தன. அவற்றைக் குனிந்து எடுத்தபோது இன்னும் சில பொட்டலங்கள் கீழே விழுந்தன. அதைப் பார்த்த விமலாவின் மனதில் பாட்டிக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. ஓடிச் சென்று, "பாட்டி எனக்கு ஒரு கூடையைத் தாருங்கள். நான் சுமந்து வருகிறேன்" என்று கேட்டாள். பாட்டி மகிழ்ச்சியோடு "நீ மகராசியா இருக்கணும், நீ மனதில் நினைத்ததெல்லாம் நடக்கணும்" என்று சொன்னாள். "ஆமா பாட்டி என் மனதிலே ஒன்று நினைத்திருக்கிறேன். உங்களுக்கு உதவி செய்வதால்தான் அது நிறைவேறும்" என்று சொல்லி, பாட்டியின் கூடையைத் தூக்கிக்கொண்டு சென்றாள்.

பாட்டிக்கு உதவி செய்தபின் விமலா பொம்மை மாளிகைக்கு துள்ளிக் குதித்து ஓடினாள். இந்த முறை அந்தப் பெரியவர் திறவு கோலை நிச்சயம் தருவார் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது. ஓடிச் சென்று அந்தப் பெரியவரிடம் கூறினாள். அதைக் கேட்ட அப் பெரியவர் விமலாவை அன்போடு கட்டிப் பிடித்துக் கொண்டு, "நீ செய்தது மிகவும் நல்ல செயல்தான் கண்ணா. ஆனால் இன்னும் நீ முயற்சி செய்தால் பொம்மை மாளிகையின் உள்ளே நுழையும் இரகசியத்தைக் கண்டு பிடித்து விடுவாய், மனம் தளராது சென்று வா" என்று கூறினார்.



*(தொடரும்)*

## புனிதர் மரிய வியான்னி



101 கடவுளின் ஆசி பெற்ற ஆர்ஸ் நகரைவிட்டுச் செல்ல வெளியூரைச் சேர்ந்தவர்கள் வருந்தினர். அங்கே வாழ்ந்தவர்கள் பேருவகை கொண்டனர். அங்கே மரிப்பவர்கூட "விண்ணகம் சென்று அன்னையைக் காண்பேன்' என்று உவந்தனர். தனி ஆசி அந்த நகருக்கு இருப்பதாகக் கருதினர். தந்தை வியான்னி அங்கே இருந்தவரை இயற்கைச் சீற்றங்கள் நிகழவில்லை எனச் செல்வி ஆர்ஸ் கூறினாள். அவருடைய செபங்களே அத்தகைய பாதுகாப்பை நல்கியது.

102 இத்தகைய இனிய நிலையைச் சாத்தான் சகித்துக்கொள்ள வில்லை. அது தந்தை வியான்னியை நேரடியாகத் தாக்கியது. இரவுக் காலங்களில் பல்லாண்டுகளாக அவரைத் துன்புறுத்தியது.



பெருங்கூச்சல் அவரது அறையில் கேட்டது. யாரோ கட்டையால் தாக்குவது போன்ற சத்தம் அவரது அறையிலும், சரக்கு அறையிலும் கேட்டது. திரைச் சீலைகள் கிழிக்கப் பட்டன. "வியான்னி நீ சாக வில்லை, நான் உன்னைப் பிடித்துக் கொள்வேன் பார்" என்று சாத்தான் அறைகூவியது.

103 முப்பது ஆண்டுகளாக தந்தை வியான்னி இந்தக் கொடுமையை அனுபவித்தார். அவர் சாத்தானை வேட்டைக் காரன் என்றார். தமது பணியை ஆற்ற இயலாத வாறு அவரை, அது தளர்ந்து போகும் அளவிற்குக் கொடுமைப்படுத்தியது. அவர் கையைப் பிசைந்து கொண்டு "வேட்டைக் காரன் மிகக் கோபமாக இருக்கிறான்; நல்லது இன்று பெரும்பாவி எவராவது மனந்திரும்பி நல்ல பாவ அறிக்கை செய்து வாழ்க்கையைத் திருத்திக்கொள்வார்" என்று புன்முறுவல் பூப்பார்.



104 இறுதியில் வேட்டைக்காரன் தன் அனைத்து முயற்சிகளையும் கைவிட்டான். தந்தை வியான்னியின் இறுதி மாதங்களில் அமைதி நிலவியது. எனினும் தந்தையின் நற்செயல்களைத் தடுக்க சாத்தான் கடும் முயற்சி மேற்கொண்டதை நாம் மறுக்க இயலாது. ஆனால் கடவுளின் ஆற்றல் சாத்தானின் சக்தியை முறியடித்தது. புனிதராகக் கொண்டாடப்பட்ட நம் தந்தை வியான்னியின் மாட்சி மேன் மேலும் ஓங்கியது. பிரான்சின் மக்கள் ஆர்ஸை நோக்கி வந்து குவிந்தார்கள்.



(தொடரும்)

RNI 1316 / 57

26th of every month

Pandianagar S.O.

**REGD. TN/SR/DDL-225/2006-2008**

Licensed to Post without Prepayment / TN/WPP - 62/SR/2006 - 2008

Statement about the ownership and other particulars about the newspaper **"NARKARUNAI VEERAN"** as per Form IV (Rule 8 of Newspaper)

| | | |
|---|---|---|
| 1. | Place of Publication | : Dindigul ✆ 2432188 |
| 2. | Periodicity of its Publication | : Monthly |
| 3,4,5. | Printer, Publisher, Editor | : Rev.Fr.M.S.Savariraj, S.J. |
| | Nationality, Address | : Indian, Beschi College, Dindigul - 624 001 |
| 6. | Name and Address of the owner of the Newspaper | : Institute of the Soldiers of God, Beschi College, P.B.No.90, Dindigul-624 001 |

I, Fr.M.S.Savariraj, S.J. hereby declare that the particulars given above are true to the best of myknowledge and belief. 01.04.2007



# விளையாட்டுத் திடலில்

மேலே உள்ள படத்தில் இடதுபுறம் சில மாணவியர் பூப்பந்து ஆடுகின்றனர். ஆனால் நடுவில் இருக்கும் ஒரு மாணவி, தனது குழுவினரை விளையாட விடாமல் தான் மட்டுமே பந்தை அடித்துக்கொண்டிருக்கிறாள். அதுபோலவே வலப்புறம் இருக்கும் மாணவனும் தன் குழுவில் உள்ள்வர்களுக்கு பந்து கிடைக்காத வண்ணம் தான் மட்டுமே நேராக பந்தை அடித்துக் கொண்டிருக்கிறான். இவர்களைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இது தன்னலம்தானே!

நாம் உலகத்தில் மற்ற மனிதர்களோடு சேர்ந்து வாழ்கிறோம். நம் சமுதாய வாழ்வில் நான் மட்டுமே நன்றாக, சுகமாக இருக்க வேண்டும் என்று நினைப்பது தவறு. நானும் நன்றாக இருக்க வேண்டும் பிறரும் நன்றாக இருக்க வேண்டும் என்பதில்தான் நம் நாட்டுப்பற்று அடங்கியுள்ளது. நாம் எது செய்தாலும் மற்றவர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு, அது அவர்களுக்கு எவ்வித பாதிப்பும், இடையூறும் தராத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். "பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புவற்றையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்றும் இயேசு பெருமானின் அறிவுரைப்படி நடப்போம்.